**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S. No.237/2014</u>**

**<u>நாள்.24.02.2026</u>**

**<u>வா.சா. 1</u>- கோமதிநாயகப்பாண்டியன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆகிய ஆவணங்கள் நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணம் என் அப்பா கிரையம் பெற்றது அதனால் எனக்கு தெரியவில்லை. நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ல் பக்கம் 4 ல் என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆகிய ஆவணங்கள் பற்றி சொல்லப்பட்டுள்ளதா என படித்துப் பார்த்து சொல்ல முடியுமா என்றால் சரிதான் சொல்லப்பட்டுள்ளது. என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆகிய ஆவணங்கள் வழக்கு தபசில் 7 வது சொத்துக்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆகிய ஆவணங்கள் எந்த சொத்துக்குரியது என்றால் வா.சா.ஆ.6 ன் முன் ஆவணம் என்பதால் தாக்கல் செய்துள்ளேன் எந்த சொத்துக்கானது என தெரியாது. வா.சா.ஆ.15 அசல் என் கைவசம் என்னிடம் இருந்தும் அதை ஏன் வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்யவில்லை என்றால் என் அப்பா வழக்கு நடத்தி வந்தார் தற்போது இறந்துவிட்டார் மற்ற ஆவணங்களுடன் இருந்தது அதனால் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.14 ஆவணத்தின் தேதியான 15.04.1969 என குறிப்பிடாமல் வா.சா.ஆ.6 ல் 14.02.1969 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 14.02.1969 தேதியிட்ட ஆவணத்தின் எண் 232/69 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணத்தின் தேதியான 15.04.1969 வா.சா.ஆ.6 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆகிய ஆவணங்கள் என்னிடம் ஏற்கனவே இருந்தும் வழக்கு வாத உரைக்கு ஒத்திவைக்கப்பட்ட பின்னர் வேண்டுமென்றே கால தாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.15 ஆவணத்தில் சர்வே எண்.270/4 ல் செண்ட் 60 கீழ்கடைசி செண்ட் 15 என சொல்லப்பட்டுள்ளது என்றால் என் அப்பா வாங்கிய ஆவணம் அதனால் எனக்கு அது பற்றி தெரியாது. வா.சா.ஆ.15 ஆவணத்தில் கண்ட சொத்து விபரத்திற்கு மாறாக, என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் சர்வே எண்.270/4 ல் செண்ட் 60 ல் தென்கடைசி 15 க்கு வடபக்கம் கிழமேலாக செண்ட் 15 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆகிய ஆவணங்கள் எனது வழக்கிற்கு விரோதமானது அதனால் கால தாமதமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு பொய்யானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.24 18:01:53 +0530